Australian Government
Department of Home Affairs

# டிஜிட்டல் முறையிலான பயணிகள் பிரகடனம்

## கண்ணோட்டம்

அவுஸ்திரேலியாவிற்கு விமானம் மூலம் வரும் அனைத்து பயணிகளும் DPD-ஐப் பூர்த்தி செய்ய வேண்டும். உங்கள் விமானப் பயண நேரத்தின் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே உங்கள் DPD-ஐப் பூர்த்தி செய்ய தொடங்கலாம், ஆனால் நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குப் புறப்படுவதற்கு முன்பு அதைச் சமர்ப்பிக்க வேண்டும். புறப்படுவதற்கு முன் DPD-ஐப் பூர்த்தி செய்யாத பயணிகள் அவுஸ்திரேலியாவுக்கு வரும்போது அநாவசிய தாமதங்களை சந்திக்க நேரிடலாம்.

DPD-ஐ நிரப்பும்போது, நீங்கள் செய்ய வேண்டியவை:

- அவுஸ்திரேலியாவில் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண் உட்பட உங்கள் தொடர்பு விவரங்களை வழங்கவும்
- உங்கள் தடுப்பூசி நிலவரம் தொடர்பாக சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும் பிரகடனத்தை அளிக்க வேண்டும்
- கடந்த 14 நாட்களில் நீங்கள் மேற்கொண்ட பயண விவரங்களை அறிவிக்க வேண்டும்
- அவுஸ்திரேலியா மற்றும் நீங்கள் தரையிறங்கும் மாநிலம் அல்லது பிராந்தியத்திற்கு வரும்போது அங்கு நடைமுறையில் இருக்கும் தனிமைப்படுத்தல் மற்றும் பரிசோதனைத் தேவைகள் குறித்து அறிந்திருக்கிறீர்கள் என்றும், அவற்றுக்கு இணங்காவிட்டால்

விதிக்கப்படும் தண்டனைகள் குறித்தும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் என்றும் பிரகடனம் செய்ய வேண்டும்.

**குறிப்பு:** உங்கள் DPD-ஐப் பூர்த்தி செய்வதற்கு முன், அவுஸ்திரேலியாவில் நடைமுறையில் இருக்கும் பயணம் தொடர்பான பிற நிபந்தனைகளையும் சரிபார்க்கவும். பயணம் செய்வதற்கு முன் உங்களுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களின் பட்டியலுக்கு, தடுப்பூசி போட்டுக்கொண்ட பயணிகள் மற்றும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத பயணிகளுக்கான தகவலைப் பார்வையிடவும்.

## தண்டனைகள் மற்றும் அமலாக்கம்

DPD, உங்களது ஆரோக்கியம் தொடர்பாக முக்கியமான தகவலைக் கோருகிறது. விமானத்தில் ஏறும் முன் முக்கியமான தகவல்கள் பூர்த்தி செய்யப்பட்டன என்பதற்கான ஆதாரத்தை நீங்கள் வழங்க வேண்டும். இது நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு விதிமுறையாகும். விதிமுறைக்கு இணங்கத் தவறும் நபருக்கு 30 தண்டப்பண யூனிட்கள் (தற்போது $6,660 AUD) எனும் சிவில் தண்டனை (அபராதம்) விதிக்கப்படலாம். இது உயிரியல் பாதுகாப்பு சட்டம் 2015 இன் பிரிவு 46 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு பொய்யானத் தகவல்களை அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களை வழங்குவது கடுமையான குற்றமாகும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சமாக 12 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.**

பொது சுகாதாரத் துறையின் உத்தரவுகளுக்கு இணங்காமல் இருப்பவர்களுக்கு மாநிலங்களும் பிராந்தியங்களும் தண்டனைகள் விதிக்கலாம். கோவிட்-19 பரிசோதனை மற்றும் சுயமாக தனிமைப்படுத்திக் கொள்ளுதல் அல்லது தனிமைப்படுத்தல் விதிமுறைகள் ஆகியவை இதில் அடங்கும். நீங்கள் ஏதேனும் விதிமுறைகளுக்கு இணங்கவில்லை என்றால், நீங்கள் சிறைத்தண்டனை அல்லது குறிப்பிடத்தக்க தண்டப்பணங்கள் உட்பட கடுமையான தண்டனைகளைச் சந்திக்க நேரிடும், இதில் நீங்கள் உள்நுழைந்தவுடன் பூர்த்தி செய்ய வேண்டிய விதிமுறைகளும் அடங்கும். குறுகிய கால அறிவிப்பில் இந்த விதிமுறைகள் மாறுபடலாம். மேலதிகத் தகவலுக்கு, மாநிலம் மற்றும் பிரதேசத்தின் வருகை விதிமுறைகளைப் பார்வையிடவும்.

அவுஸ்திரேலியாவிற்கு வருகைப்புரியும் பின்வரும் விசாதாரர்களின் விசா ரத்து செய்யப்படலாம், மேலும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படலாம்:

- அவுஸ்திரேலியாவின் எல்லைக்குள் நுழைவதற்கான விதிமுறைகளுக்கு ஏற்ப, சர்வதேச பயணத்திற்குத் தேவையான தடுப்பூசி முழுவதையும் போட்டுக்கொள்ளாதவர்கள்; அல்லது
- அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, கோவிட்-19 தடுப்பூசிக்கு மருத்துவரீதியாக ஒவ்வாமை எதுவும் இல்லாதவர்கள்; அல்லது
- தடுப்பூசி போட்டுக்கொள்வதிலிருந்து *விலக்களிக்கப்பட்ட பிரிவில்* இல்லாதவர்கள் அல்லது தனிப்பட்ட முறையில் பயண விலக்கு பெற்றவர்கள்.

## உங்கள் பிரகடனத்தைப் பூர்த்தி செய்யவும்

அவுஸ்திரேலியாவின் டிஜிட்டல் முறையிலான பயணிகள் பிரகடனம் செய்வதற்கு இலவச செயலியைப் பயன்படுத்தவும், இதனை நீங்கள் ஆப் ஸ்டோர் (ஆப்பிள்) அல்லது கூகுள் பிளே ஸ்டோர் (ஆண்ட்ராய்ட்) ஆகியவற்றிலிருந்து பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

உங்களால் மொபைல் செயலியைப் பயன்படுத்த முடியாவிட்டால், DPD ஆன்லைன் படிவத்தைப் பயன்படுத்தி உங்கள் DPD-ஐச் சமர்ப்பிக்கலாம்.

நீங்கள் ஒரு கணக்குத் (account) திறக்க வேண்டியிருக்கும், இது உங்கள் தற்போதைய மற்றும் எதிர்கால பிரகடனங்களை ஒரே இடத்தில் நிர்வகிக்க அனுமதிக்கும்.

## உங்கள் பிரகடனத்தைத் தொடங்குதல்

DPD-க்கு நீங்கள் பணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை - இது இலவசமானது.

உங்கள் பிரகடனத்தைத் தொடங்குவதற்கு முன், பின்வரும் தகவலைத் தயாராக வைத்திருக்கவும்:

- விமான எண்
- செல்லுபடியாகும் பாஸ்போர்ட்
- முந்தைய பயணத் தகவல்கள் (விமானத்திற்கு 14 நாட்களுக்கு முன்பு மேற்கொண்ட பயணத் தகவல்)
- சேருமிடம் மற்றும் தனிமைப்படுத்திக் கொள்ளுதல் தொடர்பான ஏற்பாடுகள் (தேவைப்பட்டால்)
- கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கான பதிவு அல்லது மருத்துவக் காரணங்களினால் தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாது என்றால் அது குறித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள்

ஒவ்வொரு பயணியும் DPD-ஐப் பூர்த்தி செய்ய வேண்டும். 16 வயதுக்குட்பட்ட குழந்தைக்கு, அக்குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் பிரகடனத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். 16 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சொந்தமாக தங்கள் பிரகடனத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குப் புறப்படுவதற்கு முன், நீங்கள் DPD-ஐப் பூர்த்தி செய்ய வேண்டும்.

## உங்கள் டிஜிட்டல் முறையிலான பயணிகள் பிரகடனத்தின் முடிவு

DPD-ஐப் பூர்த்தி செய்துவிட்டால் நீங்கள் அவுஸ்திரேலியாவிற்குள் நுழைந்து விடலாம் என்ற உத்திரவாதம் கிடையாது.

நீங்கள் DPD-ஐச் சமர்ப்பித்தவுடன், நீங்கள் விமானத்தில் ஏறும் முன் விமான ஊழியர்களுக்கு (மின்னணு முறையில் அல்லது பிரிண்ட் செய்யப்பட்டு இருக்கும்) காட்ட வேண்டிய விவரச்சுருக்கத் திரையைக் காண்பீர்கள். நீங்கள் அவுஸ்திரேலியாவில் நுழையும்போது இதையும் காட்ட வேண்டும்.

நீங்கள் விமானத்திற்குச் செல்லும்போது விமான ஊழியர்கள் உங்கள் உடல்நிலையை மதிப்பாய்வு செய்வார்கள். உங்கள் DPD உங்கள் உடல்நிலையை பின்வருமாறு காண்பிக்கும்:

- **பூர்த்தி செய்யப்பட்டது**: உங்கள் பிரகடனத்தில் நீங்கள் உள்ளிட்டுள்ள தகவல், போர்டிங்கிற்கான கோவிட்-19 சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதைக் குறிக்கிறது. இருந்தாலும், செக்-இன் செய்யும்போது உங்கள் ஆவணங்களை நீங்கள் காண்பிக்க வேண்டும். விமானத்தில் நீங்கள் ஏறுவதை அனுமதிக்க உங்கள் விமான நிறுவனமே இறுதி முடிவை எடுக்கும்.
- **பூர்த்தி செய்யப்படவில்லை**: உங்கள் உடல்நலம் தொடர்பான தகவலை நீங்கள் சமர்ப்பிக்கவில்லை. டிஜிட்டல் முறையிலான பயணிகள் பிரகடனம் முக்கியமான சுகாதாரத் தகவலைக் கோருகிறது. நீங்கள் போர்டிங் செய்வதற்கு முன் முக்கியமான தகவலைப் பூர்த்தி செய்ததற்கான ஆதாரத்தை நீங்கள் காட்ட வேண்டும்.
- **செக்-இன் செய்யும்போது உறுதிப்படுத்தல் தேவை**: அதாவது அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்வதற்கான விதிமுறைகளை நீங்கள் பூர்த்தி செய்யாமல் இருக்கக்கூடும். நீங்கள் செக்-இன் செய்யும்போது இதனை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். நீங்கள் பயணம் செய்யலாமா என்பதை உங்கள் விமான நிறுவனமே முடிவு செய்யும். விமான நிறுவனம் உங்களை அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல அனுமதித்தால், நீங்கள் அவுஸ்திரேலியா வந்தடைந்தவுடன் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும். உங்கள் DPD-ஐப் பூர்த்தி செய்யத் தொடங்கும் முன், நீங்கள் சுகாதாரத் துறையின்

திணைகளத்தைப் பார்வையிட வேண்டும். அவுஸ்திரேலியாவுக்கு வரும் பயணிகள் பின்பற்ற வேண்டிய முக்கியமான சுகாதார விதிகள் பற்றிய விவரங்கள் இதில் உள்ளன.

அனைத்து பயணிகளும் நீங்கள் பயணிக்கும் அல்லது போக்குவரத்துக்கு பயன்படுத்தும் அனைத்து மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களுக்கான ஏற்பாடுகளையும் சரிபார்க்க வேண்டும். ஒவ்வொரு அவுஸ்திரேலிய மாநிலத்திலும் பிராந்தியத்திலும் விதிமுறைகள் வித்தியாசமாக இருக்கும். மேலதிகத் தகவலுக்கு மாநிலம் மற்றும் பிரதேசத்தின் வருகை விதிமுறைகளைப் பார்வையிடவும்.

## ஆதரவு

உங்கள் DPD-ஐப் பூர்த்தி செய்ய உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பிரிவைப் பார்வையிடவும்.